மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 55, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

55—

கலைக் கல்லூரி

***1537 திரு. க. பாண்டியராஜன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆவடி தொகுதியில் கலைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், ஆவடி தொகுதியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்குவது குறித்து கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.*

திரு. க. பாண்டியராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் கல்வியில் இந்தியாவிலேயே உன்னத நிலைக்கு தமிழகத்தை உயர்த்தி, access and equity அனைவருக்கும் உயர் கல்வி கிடைக்கச் செய்தல், ஆண், பெண், SC/ST, ஏழை, பணக்காரர் என்ற வித்தியாசம் இல்லாத பொதுவான உயர் கல்வியை அனைவருக்கும் கிடைக்கச் செய்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு இதயப்பூர்வமான நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) உலகத் தர வரிசையில் நமது பல்கலைக்கழகங்களை இடம் பெறச் செய்ய,*

கற்பித்தல், ஆராய்ச்சி மற்றும் தொழில் ஆலோசனை (Teaching, Research & Consulting) ஆகிய மூன்று பரிமாணங்களிலும் தரத்தினை உயர்த்தி QS BRICS Ratings—ல் 4 தமிழகப் பல்கலைக்கழகங்களை உலகத் தர வரிசையில் உருவாக்கிக் காட்டிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு இந்த நேரத்தில் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சராசரியாக தமிழகத்தில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மாவட்டத்திற்கு 3 வீதம் சுமார் 87 கல்லூரிகள் இருக்கின்றன. ஆனால், தமிழகத்தில் நான்காவது பெரிய மாவட்டமாக உள்ள திருவள்ளூர் மாவட்டம், 45 இலட்சம் ஜனத்தொகையைக் கொண்ட மாவட்டம் ஆகும். இந்த மாவட்டத்தில் திருத்தணி மற்றும் பொன்னேரியில் மட்டுமே அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் உள்ளன.

முற்பகல் 10—30

தமிழகத்திலேயே நான்காவது பெரிய தொகுதியான ஆவடி 6 இலட்சத்திற்கும் மேல் ஜனத்தொகை கொண்டது. இங்கு அரசு மற்றும் தனியார் பள்ளிகள் 63 உள்ளன. ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான மாணவர்கள் பள்ளிப் படிப்பை முடித்து வெளியேறுகின்றனர். அவர்கள் மேல்படிப்பு படிக்க அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் ஏதுமில்லை. அரசு உதவி பெறும் கல்லூரியாக பட்டாபிராம் இந்துக் கல்லூரி மட்டுமே உள்ளது. அதிலும் முதுகலைப் பட்ட மேற்படிப்பு சுயநிதி நிருவாகத்தில் உள்ளது. அரசு வழிகாட்டுதல்படி நகராட்சிப் பகுதியில் கலை அறிவியல் கல்லூரி அமைக்க 3 ஏக்கர் இடம் தேவை. அவ்வாறு தேவைப்படும் இடத்தை, ஆவடி நகராட்சி 28—வது வார்டு, அரசு மேல்நிலைப் பள்ளியில் உள்ள 10 ஏக்கர் நிலம் அல்லது திருவேற்காடு 3—வது வார்டு, அயனம்பாக்கம் சர்வே எண் 20—லிருந்து 392 அடங்கிய 3.90 ஏக்கர் நிலம் கல்லூரி அமைக்க பரிந்துரை செய்யப்பட்டு classify செய்யப்பட்டுள்ளது. மேற்கூறிய இரண்டு இடங்களில் ஏதாவது ஓர் இடத்தில் கலை, அறிவியல் மற்றும் வணிகக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவடி தொகுதி அமைந்துள்ள திருவள்ளூர் மாவட்டத்தில் அரசு கலைக் கல்லூரி ஒன்று மட்டுமே இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார். திருவள்ளூர் மாவட்டத்திலே அரசு கலைக் கல்லூரிகள் இரண்டு, அரசு உதவி பெறுகின்ற கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்று, பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி ஒன்று, சுயநிதிக் கல்லூரிகள் 27 என, ஆகமொத்தம் 31 கல்லூரிகள் இயங்கி வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, 1970–க்குப் பின்பாக அரசு கலைக் கல்லூரிகள் எதுவும் நிறுவப்படாத நிலையில், தமிழகத்தினுடைய முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் கடந்த 5 ஆண்டுக் காலத்திலே 18 அரசு கலைக் கல்லூரிகள் மற்றும் 24 உறுப்புக் கல்லூரிகளை நிறுவியுள்ளார்கள். திருவள்ளூர் மாவட்டத்தில் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரி ஒன்றை நிறுவிய பெருமை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சாரும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மாவட்டத்தில் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் படிக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்றாற்போல் இப்பொழுது இருக்கின்ற கல்லூரிகளே போதுமானதாக இருக்கின்றன. இருப்பினும், கடந்த 2015–2016, 2016–2017–லே, அந்த மாவட்டத்திலுள்ள அரசு கல்லூரி, அரசு உதவி பெறும் கல்லூரி மற்றும் உறுப்புக் கல்லூரிகளில் மாணவர்களின் சேர்க்கை எண்ணிக்கையையும் மாணவர்கள் சேர்ந்திருக்கின்ற எண்ணிக்கையையும் பார்க்கும்போது சரிசமமாக அந்த எண்ணிக்கைகள் பூர்த்தியாகியிருக்கின்ற காரணத்தினால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பார்வைக்கு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியதன் அடிப்படையிலே, எடுத்துச் சென்று, அந்த மாவட்டத்திலே கூடுதலான கல்லூரிகள் தேவைப்படுமென்றால் பரிசீலிக்கப்படும். ஒரு புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்க மாநகராட்சிக்குட்பட்ட பகுதியென்றால் 2 ஏக்கர் நிலமும், நகராட்சிக்குட்பட்ட பகுதியென்றால் 3 ஏக்கர் நிலமும், கிராமப் பஞ்சாயத்துக்குட்பட்ட பகுதியென்றால் 5 ஏக்கர் நிலமும் தேவை. மேலும், ஆசிரியர் பணியிடங்கள் 15–ம், ஆசிரியர் அல்லாத

2016 ஆகஸ்ட் 11]

பணியிடங்கள் 17–ம், ஆண்டொன்றுக்கு அரசுக்கு ஏற்படும் தொடர் மற்றும் தொடராச் செலவுகள் 9 கோடியே 22 இலட்சம் ரூபாய் என்ற நிலையிலே இருக்கின்ற காரணத்தினால் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசானது தேவைக்கேற்ப பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்து, அமருகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.*

திரு. க. பாண்டியராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள அரசு கல்லூரியிலும், தமிழகத்திலுள்ள 87 அரசு கல்லூரிகளிலும் ஒரு மும்முனை வளர்ச்சி மையம் அதாவது, வேலைவாய்ப்பு மையம், தொழில் முனைப்பு வளர்ச்சி மையம் மற்றும் தொழில் முனைவோர்களை அடைகாக்கும் மையம்* (Campus Placement Cell, Entrepreneurship Development Cell, Incubator) *ஆகிய இந்த மும்முனை வளர்ச்சி மையத்தை உருவாக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். இதற்கு மத்திய அரசாங்கத்தினுடைய* Start up India, Stand up India *திட்டத்தின்கீழ் நாம் நிதியுதவி பெறலாம். அரசுக் கல்லூரிகளில், தனியார் கல்லூரிகளைவிட அதிகமாக கட்டமைப்பு வசதிகளை அமைத்துவரும் தமிழக அரசாங்கம் இந்தக் கட்டமைப்பையும் அமைத்துத் தந்தால்* placement *பெறுவதற்கும், சொந்தத் தொழில் துவங்குவதற்கும் மாணவர்களுக்கு உறுதுணையாக இருக்கும் என்று தங்கள் வாயிலாக அரசை வேண்டி அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–35

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்றைக்கு வைத்திருக்கின்ற கோரிக்கையை கடந்த 5 ஆண்டுக் காலத்திலே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசானது செயல்படுத்தி வருகிறது. அரசுக் கல்லூரிகளிலே கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக விதி 110–ன்கீழ் தனியாக 100 கோடி ரூபாய் ஒதுக்கிய அரசு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட*

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தரமான உயர் கல்வியை வழங்குகின்ற அதே வேளையில் அந்த மாணாக்கர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குகின்ற வகையிலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசானது செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சுட்டிக்காட்டி அமர்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். (குறுக்கீடு) உங்கள் இருக்கையிலிருந்தே கையை உயர்த்தினால் போதும். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.*

திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டன்சத்திரத்தில் அரசு கலைக் கல்லூரியோ அல்லது அரசு உதவிபெறும் கல்லூரியோ ஏதும் இல்லை. அந்தத் தொகுதியிலே சுமார் 20-க்கும் மேற்பட்ட மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. அப்பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்கள் கல்லூரிக்குச் செல்ல வேண்டுமென்றால் திண்டுக்கல்லுக்கோ அல்லது பழனிக்கோ, சுமார் 70 கிலோ மீட்டர், 80 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளது. தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்கள் மிகவும் சிரமத்திற்குள்ளாகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தற்போது பல்வேறு கல்லூரிகளைத் தொடங்கியிருப்பதாகச் சொன்னார்கள். வருகின்ற காலங்களில் கல்லூரி தொடங்குகின்ற சமயத்தில், தமிழகத்தில் அரசு கலைக் கல்லூரி, அரசு உதவிபெறும் கல்லூரி இல்லாத தொகுதிகளைக் கண்டறிந்து, அந்தத் தொகுதிகளிலே கல்லூரியைத் துவங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன். அதிலும் குறிப்பாக ஒட்டன்சத்திரம் தொகுதியில் படிக்கின்ற மாணவர்கள் கல்லூரிப் படிப்பைத் தொடருவதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, ஒட்டன்சத்திரத்தில் அரசு கலைக் கல்லூரி அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

2016 ஆகஸ்ட் 11]

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கிற திண்டுக்கல் மாவட்டத்தில், ஏற்கெனவே 2 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 3 அரசு உதவிபெறும் கல்லூரிகள், 15 சுய நிதிக் கல்லூரிகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அந்தப் பகுதி மாணாக்கர்களுடைய தேவைக்கேற்ப, எண்ணிக்கைக்கேற்ப, கடந்த 5 ஆண்டுகளில், 24 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளை வழங்கிய நேரத்தில், திண்டுக்கல் மாவட்டத்தின் தேவையைக் கருதி, அந்த மாவட்டத்திலும் ஒரு கல்லூரியை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மேலும், மாணவர்களுடைய எண்ணிக்கை கூடிவருகின்ற நேரத்தில், ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. பாண்டியராஜன் அவர்களுக்கு நான் தெரிவித்ததுபோல, ஓர் அரசுக் கல்லூரி தொடங்கவேண்டுமென்றால், ரூ.9 கோடியே 22 இலட்சம் நிதி தேவைப்படுகின்ற சூழ்நிலையில், அரசினுடைய நிதிநிலைக்கேற்பவும், அந்தப் பகுதியிலுள்ள கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் சேருகின்ற மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்பவும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசிலனை செய்யும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்து, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 56, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நடராஜன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

56—

கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கம்

***2543—திரு. அ. நடராஜன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் வட்டம், காமநாயக்கன்பாளையம் கிராமத்தில் புதிய கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?